அக்கங் கறுத்தவர்கற் றைக்குழலிற் புத்தியிற்சேர்
சிக்கங் கறுத்துவிடுஞ் சிங்கையே—மைக்கனம்போய்ச்
சாயுச்சி யந்தருவார் தண்பொருந்தத் தாரெனக்குச்
சாயுச்சி யந்தருவார் சார்பு. (கச)

பார்த்திக்கி லுள்ள பலதலமு முக்களவுஞ்
சீர்த்திக் களவுபடுஞ் சிங்கையே—மூர்த்திக்கு
மானமொழிந் தார்க்கு வடமிழற்கீழ் வந்திருந்து
ஞானமொழிந் தாக்கு நகர். (கரு)

பேர்த்தண் டமிழ்வரையும் பேரறமுஞ் சேர்ந்துகலி
தீர்த்தங் கொடுக்குமியற் சிங்கையே—யூர்த்த
முயலு நடத்தினர் மூதண்டத் தெல்லாச்
செயலு நடத்தினர் சேர்வு. (கசா)

காப்புவளைக் கையாருங் காலவளைக் குண்மடையுஞ்
சீப்பினள கஞ்செறிக்குஞ் சிங்கையே—கோப்புமுறைக்
குஞ்சிதத் தாளார் கொடும்பா தகர்குடியை
வஞ்சிதத் தாளார் மனை. (கஎ)

காப்பாயர் தோளிணையுங் காந்தளில்வீழ் வண்டினமுஞ்
சேப்பாய் மருப்பொசிக்குஞ் சிங்கையே—காப்பாய
சற்பப் படலையார் தம்படிவ மாம்பவள
வெற்பப் படலையார் வீடு. (கஅ)

பாண்டிக் குலவலியிற் பல்கடவு ளாலயத்திற்
சேண்டிக் குரனவிலுஞ் சிங்கையே—வேண்டியெனை
யாழி மலையவெற்பா ராக்கையெடா தாண்டுகொண்ட
வாழி மலையவெற்பார் வாழ்வு. (கக)

**சிங்கைச்சிலேடைவெண்பா முற்றிற்று.**

---

அகப்பட்ட பிரதிகளில் ஒருசெய்யுள் குறைவாக விருந்தமையால் அப்படி அச்சிடப்பட்டது.

